மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.147/2020</u>

2025ம் ஆண்டு நவம்பர் 11ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>11.11.2025 வா.சா.2 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். இந்த வழக்கிற்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்பதை எனக்கு தெரியாது என்றால் ஆமாம். தாவா சொத்தை தங்கராஜ் எப்போது கிரையம் வாங்கினார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை வாதி கிரயம் வாங்கியதில் இருந்து நான் தாவா சொத்தில் வேலை செய்து வருகிறேன் என்று நான் சொன்னது தவறு என்றால் ஆமாம். தாவா

சொத்திற்கு வடபுறம் என்ன உள்ளது என்றால் வாய்க்கால் கரை உள்ளது. அது என்ன வாய்க்கால் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வாய்க்காலை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் அதிகமாக பார்த்ததில்லை. வேலைக்கு சென்றால் வேலையை மட்டும் தான் செய்வேன்.

2. அந்த வாய்க்கால் எவ்வளவு ஆழம் இருக்கும் என்றால் இடுப்பளவு ஆழம் இருக்கும் பெரிய வாய்க்கால் கிழக்கு நோக்கி செல்கிறது ஆழ அகலம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் இருந்து நான் குடியிருக்கும் ஊர் சுமார் 20 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். தாவா பூமி எந்த ஊரில் உள்ளது என்றால் ஓலப்பாளையம், பொன் பரப்பி சாலையில் உள்ளது. பொன்பரப்பி எங்கே உள்ளது என்றால் வடக்கே உள்ளது தாவா பூமிக்கு வடபுறம் உள்ள பெரிய வாய்க்கால் எங்கிருந்து எங்கே வருகிறது என்றால், காங்கேயத்திலிருந்து கிழக்கே வருகிறது என்றால் அது எல்பிபி வாய்க்காலா என்றால் அது எனக்கு தெரியாது. தாவா பூமிகள் என்ன வகையான பாசனத்தில் உள்ளது என்பதை எனக்கு தெரியாது என்றால் ஆமாம். தாவா பூமியின் அனுபவம் எனக்கு தெரியுமா என்றால் இருவருக்கு பாத்தியம். தங்கராஜ் மற்றும் அவரது கொழுந்தியாளுக்கு பாத்தியம். 2016 இல் இருந்து 2020 வரை நான் தாவா பூமிக்கு சென்றுள்ளேன் கடைசியாக 2020 ல் தண்ணீர் காட்டுவதற்காக தாவா பூமிக்கு நான் சென்றேன் ஒவ்வொரு மெயின் வாய்க்காலின் ஒரு பக்கத்தில் ஜீப் ரோடு இருக்கும் என்றால் அது எனக்கு தெரியாது.

3. தாவா பூமி கிரையம் பெறப்பட்டது சம்பந்தமாகவும் அதில் உள்ள தட பாத்தியங்கள் சம்பந்தமாகவும் எனக்கு நேரில் எதுவும் தெரியாது

என்றால் சரிதான். வாதி தன் பாகத்தில் நூறு தென்னை மரங்கள் வைத்துள்ளார் என்றும், அது காய்ப்பிற்கு வந்துவிட்டது என்றும் சொன்னால் சரிதான். தாவா பூமிக்குள் கிணறு உள்ளதா என்றால் இல்லை ஜோதிமணி பங்கில் இருந்து தண்ணீர் ஓட்டி வருகிறார். நான் தாவா பூமிக்கு எவ்வாறு சென்று வந்தேன் என்றால் வேலியை ஒட்டி தென்புறம் உள்ள தடத்தின் வழியாக நான் சென்று வந்தேன். வாதி எனக்கு சர்ச்சுக்கு வருவதன் அடிப்படையில் பழக்கம் நான் தற்போது அரசு மருத்துவமனையில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்கிறேன் என்றால் சரிதான்.

4. நான் தினக்கூலிக்கு சென்று வருகிறேன் என்றால் ஆமாம். எனது முதல் விசாரணை நிரூபன வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் நான் சொன்னதை தான் வழக்கறிஞர் தயார் செய்தார் அதை நான் படித்து பார்க்கவில்லை என்றால் ஆமாம். நான் சொல்வது போல் எந்த தடமும் இல்லை என்றும், நான் தாவா சொத்திற்கு சென்றதே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்திக்கும், எனக்கும் சம்பந்தமில்லை என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.11 18:56:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.